மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
30.09.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# ஐநாவுடன் ஒத்துழைத்தமைக்காக மக்கள் பழிவாங்கப்படுகின்றனர்

மனிதஉரிமைவிவகாரங்களில் ஐநாவுடன் ஒத்துழைத்தமைக்காக இலங்கை உட்பட 42 நாடுகளில் மக்கள் பழிவாங்கல்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர் என தெரிவிக்கும் புதிய அறிக்கையொன்று வெளியாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரின் வருடாந்த அறிக்கையிலேயே இந்த விபரங்கள் இடம்பெற்றுள்ளன. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் அரச மற்றும் அரசு சாராத தரப்பினரால் பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல்களிற்குள்ளாகியுள்ளனர் என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மூலம் இலக்குவைக்கப்பட்டுள்ளனர் இணையவெளியிலும் அதற்கு அப்பாலும் கண்காணிக்கப்படுகின்றனர் என புதிய அறிக்கை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பொறிமுறைகளுடன் ஒத்துழைத்தவர்கள் மனித உரிமை மீறல்களிற்காக நீதி பெறுவதற்காக ஆதாரங்களை வாக்குமூலங்களை 02

# இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம்?



உலகில் எந்தவொரு நாட்டு மாணவர்களும் கல்வி கற்கக் கூடிய வகையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகமொன்றை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் இலங்கையில் ஸ்தாபிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை ஒன்றை முன்மொழிந்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவாவிற்கும் (ஆயளயவளரபர யுளயமயறய) இடையிலான சந்திப்பு இன்று (30) முற்பகல் மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 02

# மாலைத்தீவின் சுகாதார இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட 17பேர் அடங்கிய தூதுக்குழு இலங்கைக்கு விஜயம்

மாலைத்தீவின்சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் ஷா மக்கீர் உள்ளிட்ட 17 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் நாட்டை வந்தடைந்துள்ளனர். இதனையடுத்து, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் குறித்த தூதுக்குழுவினருக்கும் இடையிலான விஷேட செயலமர்வு கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுகாதாரத்துறையில் காணப்படும் முன்னேற்றம், ஒத்துழைப்பு, அனுபவம் என்பன தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குடியேறிகள் சுகாதார கொள்கையை தயாரிப்பதற்கான அனுபவத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு நாட்டில் குடியேறிகள் சுகாதார கொள்கை தயாரிக்கப்பட்டது. அதனை ஆராய்ந்து, அந்த 02

# நீதிமன்றம் சென்ற மைத்திரி

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை இடைநிறுத்துமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். மனுவின் பிரதிவாதிகளாக கொழும்பு கோட்டை நீதவான் மற்றும் அந்த நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளதாக அத தெரண நீதிமன்ற செய்தியாளர் தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதல் நடைபெறவுள்ளதாக தகவல் கிடைத்தும் அதனை தடுக்க தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தேக நபராக பெயரிட்டு எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு உதவத் தயார்



இலங்கையின் கடன் பிரச்சினையில் ஜப்பான் தனது பங்கைச் செய்யத் தயாராக உள்ளதாகவும் அதேபோன்று, சீனா மற்றும் இந்தியா போன்ற ஏனைய கடன் வழங்குநர்களும் பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே ஜப்பானின் நிதி அமைச்சர் சுனிச்சி சுசுகி (**Shunichi Suzuki**) இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார். 02

## விளையாட்டு அமைச்சை பொறுப்பேற்கவும் நாமலிடம் கோரிக்கை

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சை உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு நாமல் ராஜபக்ஷவிடம் சிலர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விளையாட்டு சங்க அதிகாரிகள், முன்னாள் வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் அடங்கிய குழுவினர் நாமல் ராஜபக்ஷவை சந்தித்துள்ளதாக விளையாட்டுத்துறை தொடர்பான தகவல்கள் தெரிவிக்கின்றன.

# “ரிக்ரொக்”க்கினால் பாதிப்புக்குள்ளாகும் மாணவர்கள்

” **TikTok** ” மற்றும் “ஒன்லைன் கேம்” ஆகியவற்றுக்கு அடிமையாகி , அதில் இருந்து மீள்வதற்கு உளவள சிகிச்சைக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. ரிக்ரொக்குக்கு அடிமையாகி அதன் மூலம் காதல் வயப்படுதல் , அதிக நேரம் ரிக்ரொக் செயலியுடன் செலவழித்தல் மற்றும் உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றுக்கு முகம் கொடுத்த 10 பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட 16 மாணவர்கள் கடந்த 09 மாதங்களில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வாறான சிகிச்சைகளுக்கு பெரும்பாலும் விரும்பி சிகிச்சை பெற பலர் வைத்திய சாலைகளுக்கு செல்வதில்லை. அவ்வாறு இருக்கையில் கடந்த 09 மாதங்களில் 16 பாடசாலை மாணவர்கள் சிகிச்சை பெற வந்துள்ளனர் என்றால் , யாழில் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவாக இருக்கலாம் என தாம் அஞ்சுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். 02

# எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும்




கொழும்பு மாவட்டத்தில் பல இடங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள அதி விசேட வர்த்தமானி தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையாளர் **Clement Voule** கவலை தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கையை பொதுக் கூட்டங்களுக்குத் 02

# இலங்கை மக்களுக்காக தொடர்ந்து முதலீடு செய்வதாக அமெரிக்கா அறிவிப்பு



கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தை திறந்து வைப்பதன் மூலம் இலங்கையர்களின் கனவுகளை நனவாக்க ஐக்கிய அமெரிக்கா தனது கரங்களை நீட்டியதுடன், மகிழ்ச்சியான நட்புறவையும் உறுதிப்படுத்தியது. கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமெரிக்க தூதுவர் ஜ•லி சுங் (**Julie Chung**) இந்த சவாலான நேரத்தில் அமெரிக்கா இலங்கை மக்களுக்காக தொடர்ந்து முதலீடு செய்யும் என்றும் தெரிவித்தார்.அமெரிக்காவும் இலங்கையும் நண்பர்கள் என்றும் மதிப்புமிக்க ஜனநாயக நாடுகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையர்களுக்கு இது ஒரு சவாலான நேரம் என தெரிவித்த ஜ•லி சுங் (**Julie Chung**), இலங்கையில் உள்ள மக்களுக்காக அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றது எனவும் இந்த மையம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த இடம் தன்னுடையது அல்ல என்றும் இது உங்கள் இடம் என்றும் தெரிவித்த அவர், இது உங்கள் கனவுகளை அடைய உதவுகிறது என்றும் கூறினார்.



## இலங்கைக்கு உதவத் தயார்

சீனா, இந்தியா மற்றும் ஏனைய கடன் வழங்குனர்களின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கு தனது சொந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இலங்கையை அவர் வலியுறுத்தியுள்ளார். அத்தகைய முன்நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் ஜப்பான் தனது பங்கைச் செய்யும் என்று ஜப்பான் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டத்தில் உரையாற்றிய சுசுகி அனைத்து கடன் வழங்குநர்களும் ஒருங்கிணைந்த முறையில் இலங்கைக்கு ஆதரவை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.
அதே நேரத்தில் கடனாளி நாடுகள், கடனை பெற்றுக்கொள்வதற்கான சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம்?

தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை கவனத்திற்கு கொண்டு வந்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்திற்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் வரவேற்றார். கடந்த காலங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக்கு வழங்கிய அவசர உதவிகளுக்காக இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராக இருப்பதாக அதன் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடம் உறுதியளித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருக்கு, ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். இதன்போது, ஆசிய அபிவிருத்தி வங்கியில் பணியாற்றும் இலங்கையர்களின் நலன் குறித்தும் கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

## எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும்

தடையாக முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம், இலங்கை நாடாளுமன்றம், உச்ச நீதிமன்றம், கொழும்பு உயர் நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு, இலங்கை இராணுவம் தலைமையகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்புப் படைகள் மற்றும் முப்படைத் தளபதிகளின் தலைமையகம் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் பல இடங்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள வளாகங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## மாலைத்தீவின் சுகாதார இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட

நாட்டில் குடியேறிகள் சுகாதார கொள்கையை தயாரிப்பதற்கான அனுபவத்தை பெற்றுக்கொள்வதே குறித்த தூதுக்குழுவின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐநாவுடன் ஒத்துழைத்தமைக்காக

தகவல்களை பரிமாறுவதற்காக ஐநாவின் நடைமுறைகளை பயன்படுத்தியவர்கள் பழிவாங்கப்பட்ட அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களை ஐநாவின் அறிக்கை பதிவு செய்துள்ளது. ஐக்கியநாடுகளுடன் ஒத்துழைக்க முயன்றவர்கள் அல்லது ஒத்துழைத்ததாக கருதப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அச்சுறுத்தல் அல்லது பழிவாங்கல் காரணமாக பல நாடுகளில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஐநாவுடன் ஒத்துழைப்பதை தவிர்த்துக்கொண்டுள்ளனர் அல்லது தங்கள் பெயர் விபரங்களை வெளியிடாமலிருந்தால் மாத்திரம் தகவல்களை வழங்க இணங்கியுள்ளனர். ஐநாவின் உறுப்புநாடுகள் பழவாங்கல்களில் ஈடுபடப்போவதில்லை என வாக்குறுதியளித்துள்ள போதிலும் இது தொடர்பில் தங்கள் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ள போதிலும் ஐநாவுடன் தங்கள் மனித உரிமை கரிசனைகளை பகிர்ந்துகொண்டமைக்காக மக்கள் எவ்வளவு தூரம் துன்புறுத்தல்களிற்குள்ளாகியுள்ளனர் என்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது என மனித உரிமை விவகாரங்களிற்கான உதவி செயலாளர் நாயகம் இல்சே பிரான்ட்ஸ் ஹெளரீஸ் தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கை அதிர்ச்சியளிக்கின்றது பழிவாங்கல்கள் குறித்த பல சம்பவங்கள் வெளியாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய சம்பியனாக சாதனை படைத்த சிவாநந்தா தேசிய பாடசாலையின் இளம் டெனிஸ் வீரர்கள்




கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த (28–09–2022) கொழும்பில் இடம்பெற்ற தேசிய டென்னிஸ் பகிரங்கச் சுற்றுப்போட்டியில் சிவாநந்தா தேசிய பாடசாலை இளம் வீரர்களின் நிதானமும் அதிரடியும் கலந்த பரபரப்பான ஆட்டம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தேசிய அளவில் இடம்பெற்ற போட்டியில் பல பாடசாலை அணிகளை வெற்றிகொண்டு இறுதிப்போட்டியில் விளையாட்டு விற்பன்னர்களை விசேடமாகக்கொண்ட கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியினை சாகச ஆட்டம் மூலம் வீழ்த்தி 14 வயதிற்குட்பட்டோர் பிரிவில் தேசிய சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது சிவாநந்தா தேசிய பாடசாலை அணி.

இளம் வீரர்களின் வெற்றி சிவாநந்தாவின் வரலாற்றுச் சாதனைகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சிவாநந்தா தேசிய பாடசாலையின் நாமத்தையும் மட்டு மண்ணின் பெருமையையும் தேசிய அளவில் பிரகாசிக்கச் செய்த இளம் சாதனை வீரர்களான செல்வன் கோ. தனுஸ்கர், செல்வன் ர.இளங்கோவன் மற்றும் செல்வன் க.ஜெயர்சன் ஆகியோர் பாராட்டப்படவேண்டியவர்கள். மட்டக்களப்பு டென்னிஸ் பயிற்சி நிலையத்தின் விளையாட்டு வீரர்களாகத் திகழும் சிவாநந்தாவின் இளம் சாதனை வீரர்களின் சாதனைப் பயணத்திலும் வெற்றியின் பின்னாலும் பயணித்துக்கொண்டிருப்பவர்களில் டென்னிஸ் பயிற்றுவிப்பாளர்களும், பெற்றோர்களும் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

பிள்ளைகள் சிறந்த வீரர்களாக மிளிர அயராது பாடுபடும் பெற்றோர்களான திருஊதிருமதி கோகுலதாசன் , திருஊதிருமதி ரவீந்திரன், திருஊதிருமதி கனகரெத்தினம் ஆகியோர் போற்றுதற்குரியவர்களாவர். இளம் வீரர்களை தேசிய வீரர்களாகச் சாதனை படைக்குமளவு காத்திரமான தொடர் பயிற்சிகளையும் நுணுக்கங்களையும் சிறப்புற வழங்கி சிவாநந்தாவின் பெயரும் மட்டக்களப்பின் பெயரும் பிரகாசிக்கும் வண்ணம் தங்களை அர்ப்பணித்த இலங்கை தேசிய டென்னிஸ் சம்மேளனத்தின் பிராந்திய இணைப்பாளரும் மட்டக்களப்பு டென்னிஸ் பயிற்சி நிலையத்தின் தலைமைப் பயிற்றுவிப்பாளருமான திருவாளர் வி. தினேஸ்குமார், பயிற்றுவிப்பாளர்களான திருவாளர் ஈ. லுக்சன் மற்றும் திருவாளர் ஸ்ரான்லி வருண் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். பயிற்றுவிப்பாளர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புமிக்க சேவை தொடர வாழ்த்துக்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக பயணச் செலவு, பயிற்ச்சிச் செலவு, தங்குமிடச் செலவு முதலானவைகளை அனுசரணைகளெதுவுமில்லாமல் தாங்களே பொறுப்பெடுத்ததோடு பாடசாலையின் பெயர் மிளிரக் காரணமான பெற்றோர்கள் உண்மையில் மெச்சத்தக்கவர்களாகின்றனர். சிவாநந்தாவிற்கென பிரத்தியேக பயிற்சிக் களமோ பயிற்றுவிப்போ இல்லாவிடினும், சிவாநந்தா தேசிய பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரின் தட்டிக்கொடுப்புகள், ஊக்குவிப்புக்கள் என்பன இளம் சாதனை வீரர்கள் தேசிய ரீதியில் வெற்றிவாகை சூட உதவியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் சகல வசதிகளுடனும் கூடிய டென்னிஸ் பயிற்ச்சிக் களம் உருவாகுவது காலத்தின் தேவையென உணரப்பட்டுள்ளது.

மேற்படி வெற்றியின் ரகசியம், இளம் வீரர்களின் சாதனை, சாதனைப் பயணத்திற் பங்குகொண்டோரென அனைவரையும் வரவேற்றுக் கௌரவிக்கும் நிகழ்வொன்றினைச் செய்வதற்கு சிவாநந்த வித்தியாலய கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர் நலன்புரிச் சங்கம் முடிவெடுத்துள்ளமையானது பாடசாலைமீது ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் அர்ப்பணிப்பினையும் எடுத்துக்காட்டுகின்றது. தேசிய ரீதியிலான டென்னிஸ் போட்டியில் சிவாநந்தா தேசிய பாடசாலை வீரர்கள் பங்குகொள்வதை அறிந்து மூன்று டென்னிஸ் வீரர்களுக்கும் சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தால் விளையாட்டுக்கான மேலாடை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

1998 க.பொ.த சாதாரணதர மற்றும் 2001உயர்தர சிவாநந்த நண்பர்களின் மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தின் செயற்பாட்டினூடாக இத் தகவலையும் பதிவினையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு சிவாநந்தா பாடசாலையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பயணத்தில் என்றென்றும் இணைந்திருப்போமென்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 5வது சர்வதேச ஆய்வு மாநாடு




கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 5வது சர்வதேச ஆய்வு மாநாடு புதன்கிழமை (28) நிறுவக வளாகத்தில் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி. புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்றது. சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் இதுவரை நான்கு சர்வதேச ஆய்வு மாநாடுகளை ஒழுங்கமைப்புச் செய்து மிகவும் சிறப்பான முறையில் நடாத்தியுள்ளதோடு இந் நிறுவகத்தை உலக அறிஞர்கள், ஆய்வாளர்கள், புலமையாளர்களின் பார்வைக்கும் உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆய்வு மாநாட்டில் தமிழகப் பேராசிரியர்களான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரி.அருட்செல்வி அவர்களும் பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தின் மானிடவியல் துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி. எஸ் பக்தவக்சல பாரதி அவர்களும் ஆதார சுருதி உரைகளை நிகழ்த்தினர். இவ் ஆய்வு மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பிறேமகுமார டி சில்வா, கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் (2022) "மாறிவரும் உலகின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளலும் இனக்குழு சமூகத்தின் கலை பண்பாட்டுப் பெறுமானங்களை அடையாளப்படுத்தலும்" என்பதை மையப்பொருளாகக் கொண்டு ஆய்வு மாநாடு நடைபெற்றது. ஆய்வு மாநாட்டில் உள்நாட்டு ஆய்வாளர்களின் 24 ஆய்வுகளும் மூன்று வெளிநாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகளும் முன்வைக்கப்பட்டன. இசை, நடனம், நாடகம், இலக்கியம், பண்பாடு, சமூகவிஞ்ஞானத்துறை சார்ந்த ஆய்வுகள் பலவும், பண்பாட்டு வெளியில் இசை, அரங்கும் சமூகமும், கட்புலமும் பண்பாடும், சதிராட்டமும் பன்முகத் தோற்றமும், இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும், வாழ்வியலில் தொழில்நுட்பம் என்ற பொருண்மைகளில் ஆறு அமர்வுகளாக நடைபெற்றன.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில், அதிதிகள் உரை மற்றும் ஆதார சுருதி உரைகளும் பன்மைத்துவக்கலாசாரப் பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் இசை, நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1 – 4 மணிவரை ஆய்வாளர்களின் ஆய்வுரைகள், கருத்துரைகள், கலந்துரையாடல்களுடன் கூடிய புலமைசார் அமர்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இனக்குழு சமூகமும் தமக்கென தனித்துவம் மிக்க கலை, பண்பாட்டு அடையாளங்களைக் கெண்டுள்ளது. உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தம்மையும் மாற்றியமைத்துக் கொள்ளவேண்டிய தேவையினால் இனக்குழு சமூகம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கலை, பண்பாட்டுச் சிதைவுகளை எதிர்கொள்கிறது. எனவே இனக்குழு சமூகத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களை அடையாளப்படுத்திப் பேணுவதையும் அதனை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகமானது கலை மற்றும் பண்பாட்டம்சங்களைப் பயிற்றுவிக்கும் நிறுவகமாக அமைந்துள்ளமையால் விரிவுரையாளர்களின் நெறிப்படுத்தல்களில் உருவான பல்வேறு மாலை நேர கலை நிகழ்வுகளும் இம் மாநாட்டின் பிரதான சிறப்பம்சமாக திறந்த வெளி அரங்கில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் ஆக்க இலக்கிய படைப்பாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் நெறியாளர்கள், விமர்சகர்கள், இயக்குனர்கள், ஓவியர்கள், கலைஞர்கள், கைவினையாளர்கள் என சமூகத்தில் உள்ள புலமையாளர்கள், பயிற்சியாளர்கள், திறனாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இம் மாநாட்டின் இணைப்பாளாராக கலாநிதி. வானதி பகீரதன், செயலாளராக திரு.உ.பிரியதர்சன், பொருளாளராக கலாநிதி தாக்சாயினி பரமதேவன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர். "உலகமயமாக்கல் சூழலில் பாரம்பரியக் கலைகள்", " போரும் போருக்குப் பின்னரான காலத்திலும் தொட்டுணராப் பண்பாட்டின் கலை வடிவங்கள்", "உள்ளூர் அறிவு முறைமைகள் மற்றும் தொட்டுணராப் பண்பாட்டின் மரபுரிமைகளைப் பிரதானப்படுத்துவதன் முக்கியத்துவம்" , "பன்முகப் பண்பாட்டுக் கலைச் செயற்பாடுகள்" முதலான தொனிப் பொருள்களில் சர்வதேச ஆய்வு மாநாடுகளை சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் நடத்தியுள்ளது.

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com
வெள்ளிக்கிழமை
சுபீட்சம் 30 செப்டெம்பர் 2022


# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரி பூஜை



**(வாஸ் கூஞ்ஞ)**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில்இ நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாடு புதன்கிழமை (செப்டெம்பர் 28) இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இச்சிறப்பு வழிபாட்டில் இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சரும் இராஜ்யசபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி அவர்கள்சிறப்பு அதிதியாகக்கலந்து கொண்டிருந்தார்.

நவராத்திரி என்பது வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைக் குறிக்கும் தெய்வங்களான துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகியோரை நினைவுகூர்ந்து, ஒன்பது இரவுகள் நடத்தப்படுகின்ற ஓர் இந்து பண்டிகையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது பழி சுமத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்

## முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

**(வாஸ் கூஞ்ஞ)**

ராஜபக்ச ஆட்சி காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை வழங்குவதாக தெரிவித்து தமிழ் தேசிய கூட்டமைப்பை 18 முறை சுற்று பேச்சு வார்த்தைக்கு அழைத்து ஏமாற்றிய வரலாறு நாமல் ராஜபக்ச மறந்திருக்க மாட்டார். அப்படியிருந்தும் தமிழர் பிரச்சனை தொடர்பாக நாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது பழி சுமத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்தார். வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் விடுத்திருக்கும் ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிப்பதாவது



நாமல் ராஜபக்ச ஊடகத்துக்கு தெரிவிக்கப்பட்ட விடயம் குறிப்பாக ராஜபக்சவின் ஆட்சி காலத்தின்போது தமிழ் மக்களுக்கான தீர்வை தாங்கள் கொடுப்பதற்கு முன்வந்தபோதும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தங்களின் சுயஇலாப அரசியல் நோக்கில் அவற்றை தட்டிக் கழித்ததாக நாமல் ஒரு குற்றச் சாட்டை முன்வைத்திருந்தார். உண்மையில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் 2010 தொடக்கம் 2015 வரையான ஆட்சி காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை வழங்குவதாக தெரிவித்து தமிழ் தேசிய கூட்டமைப்பை 18 முறை சுற்று பேச்சு வார்த்தைக்கு அழைத்து ஏமாற்றிய வரலாறு நாமல் ராஜபக்ச மறந்திருக்க மாட்டார் என நினைக்கின்றேன். இவ்வாறு அவர் தெரிந்திருந்தும் ஒரு அப்பட்டமான குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார் குறிப்பாக நாமல் ராஜபக்ச அவர்கள் மகிந்த ராஜபக்ச ஆட்சியின் பிற்பாடு கோட்டபாய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தபின் குறிப்பிட்டது தமிழ் மக்களுக்கு இங்கு எந்தவித பிரச்சனையும் இல்லை ஆனால் பொருளாதார பிரச்சனை மட்டுமே காணப்படுகின்றது என்று

இதன் அடிப்படையில் அவரின் முன்நகர்வு இறுதியில் நாடு பூராகவும் பொருளாதார பின்னடைவை சந்தித்து உள்ளது. இதனால் இவர்களுக்கு வாக்களித்த சிங்கள மக்களே விரட்டி அடித்த சம்பவத்தை நாமல் மறந்துள்ளார் போல என நாங்கள் நினைக்க வேண்டியுள்ளது. உண்மையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதில் ராஜபக்ச அரசு ஒருபோதும் நினைக்கவில்லை என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. மகிந்த ராஜபக்ச தான் தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என 2011 தொடக்கம் 2015 வரை உள்ள ஆட்சி காலத்தில் அரசியல் அமைப்பில் 18 வது திருத்தம் ஒன்றை கொண்டு வந்தார்.

அதில் ஒரு ஜனாதிபதி இரண்டு முறை அல்ல பல தடவைகள் ஆட்சியில் இருக்கலாம் என திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அவர் தமிழ் மக்களுக்கு இழைத்த குரோதம் அநியாயத்தின் காரணமாக 2015 ஆம் ஆண்டு அவர் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார். ராஜபக்சவின் தொடர் கனவு தோல்வியில் அமைந்தது. இதன் அடிப்படையின் வெளிப்பாடு நாமல் ராஜபக்ச இவ்வாறான ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதன் காரணமாக இருக்கின்றது.

ஆகவே இவர்கள் தொடர்ந்து ஏமாற்று வேலைகளை தொடர்ந்தால் சிங்கள மக்களால் விரட்டப்படும் நிலமை எதிர்காலத்தில் உருவாகும். ஆகவே நாமல் ராஜபக்ச அவர்கள் இவ்வாறான பொய் கற்றச்சாட்டை சுமத்துவதை இனியும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளுகின்றேன் என இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

# "தவறான தகவல்களுக்கு எதிராவோம்" செயலமர்வு



இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின்(**SLPI**) ஏற்பாட்டில், **CFLI** மற்றும் **MYTHOS LABS** இன் அனுசரணையில், "தவறான தகவல்களுக்கு எதிராவோம்" எனும் தலைப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக துறைசார்ந்தோருக்கான பயிற்சி நேற்று செப்டம்பர் 29 ஆம் திகதி (வியாழக்கிழமை) கண்டியில் நடைபெற்றது.

கண்டி **Oak ray Regency** ஹோட்டலில் தமிழ் மொழியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆண் மற்றும் பெண் ஊடகவியலாளர்கள், ஊடக துறைசார் மாணவர்கள் உட்பட 17 பேர் கலந்துகொண்டனர். அதேவேளை சிங்கள மொழி மூலமான ஊடக நிகழ்ச்சியும் இந்த ஹோட்டலில் நடைபெற்றது. இலங்கையின் ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவுவது மற்றும் அதன் தாக்கம், தவறான தகவல்களை அடையாளம் கண்டு அதற்கு பதிலளிப்பது , தவறான தகவல்களைப் அறிக்கையிடுதல் மற்றும் தவறான தகவல் வலையமைப்புகளுக்கு முகங்கொடுத்து இணைய பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து இந்த செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது. நடைமுறைச் செயற்பாடுகளுடன் கூடிய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்றுவிப்பாளராக விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் திரு. மொஹமட் பைரூஸ் இணைந்துகொண்டார்.

இலங்கையில் தவறான தகவல்கள் பரவி வரும் இக்காலத்தில் இது ஒரு அவதானத்திற்குரிய தலைப்பாக இருப்பதனால் பல ஊடகவியலாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இத்திட்டத்தில் இணைந்தனர். சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் தமது தொழில் அனுபவத்தையும் சேர்த்து செயலமர்வை செழுமைப்படுத்தியதுடன், அர்த்தமுள்ள கலந்துரையாடல்களுடன் நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவுற்றது..

# இன்று வயலுக்குள் பயணித்த பேரூந்து



**(காரை சகா)**

பிரதான பாதையில் சென்று கொண்டிருந்த பேரூந்து பயணிகளுடன் பாதையை விட்டு விலகி அருகிலுள்ள வயலுக்குள் பாதுகாப்பாக பயணித்தது. அம்பாறை சம்மாந்துறை பிரதான பாதையில் இன்று (30) காலை பயணித்துக் கொண்டிருந்த அரச பேரூந்து பாதையை விட்டும் விலகி வயலுக்குள் பாய்ந்துள்ளது. இவ்விபத்தானது சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மல்வத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்துக்கு காரணம் பேரூந்து அதி வேகமாக சென்றமையே காரணம் என கூறப்படுகிறது. சம்மாந்துறை பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஆயுதங்களுடன் இருவர் கைது



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

பொலன்னறுவை – அக்பர்புர, பங்குரான பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவ புலனாய்வுப் பிரிவினர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இன்று (30) அதிகாலை 4.40 மணியளவில் பொலன்னறுவை – புலஸ்திபுர பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது அயுதங்களுடன் 32 மற்றும் 47 வயதுகளுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த வீடுகளில் இருந்து 303 ரக துப்பாக்கி, 303 ரக மெகசீன், 7.62X51 ரவைகள், 7.6X39 ரவைகள், வாள்கள், இரும்பு சன்னங்கள், மோட்டார் சைக்கிள் செயின்கள், சொட்கன் துப்பாக்கி அதன் தோட்டாக்கள் போன்றவைகள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த புலஸ்திபுர பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாளை காரைதீவில் சர்வதேச சிறுவர் தின விளையாட்டு விழா

**( காரை சகா)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலானந்த மொன்டிசோரி முன்பள்ளி பாடசாலை நாளை (1) சனிக்கிழமை சிறுவர் தின நிகழ்வை காரைதீவு கடற்கரையில் நடாத்தவுள்ளது. கடற்கரையில் நாளை பிற்பகல் சிறுவர் தின விளையாட்டு விழா ஆசிரியைகளான ஜெயநிலாந்தினி ரம்யா தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொள்கிறார். கௌரவ அதிதியாக பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொள்கிறார். சிறுவர் விளையாட்டுகள் நடைபெற்று பரிசுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்று இன்று (30) நுவரெலியா அல்பைன் ஹோட்டலில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் மற்றும் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்துக்கொண்டனர்.

# மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் ஒழுக்கக் கட்டுப்பாடு செயன்முறைப் பயிற்சியும்

**(எம்.ஏ.றமீஸ்)**

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் இயங்கி வரும் மாணவர் தலைவர்கள்மத்தியில்ஒழுக்கவிழுமியங்களைகட்டியெழுப்புவதோடு அம்மாணவர்களுக்கு மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வேலைத்திட்டம் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் நேற்றுமுன்தினம்(29) இடம்பெற்ற இந்நிகழ்வின்போது இப்பாடசாலையில் இயங்கி வரும் 160 மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டிவைக்கப்பட்டன.

பிரதி அதிபர் எம்.பி.செய்னுலாப்தீனின் வழிப்படுத்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாய் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், மாணவர் தலைவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களை தெளிவு படுத்தும் செயன்முறைப் பயிற்சியும் இதன்போது இடம்பெற்றன. இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்கொண்டு செல்லும் வகையிலும், மாணவர்கள் மத்தியில் ஒழுக்க விழுமியங்களை முறையாகக் கட்டியெழுப்பும் வகையிலும் துறைசார் வளவாளர்கள் மூலம் கருத்துரைகளும்



செயன்முறைப் பயிற்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்–ஷேய்ஹ் ரி.எம்.எம்.அன்சார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி எம்.எஸ்.அப்துல் மஜீத், கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஐ.எம்.உவைஸ், ஓய்வு நிலை அதிபர் எம்.ஐ.சஹாப்தீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





**பேராசிரியர் சி.பத்மநாதன்**
**வேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒரு அதிசயமான அருங்காட்சியகம்



கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாகி நான்கு தசாப்தங்கள் நிறைவெய்திய நிலையில், அப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கலைக்கூடம் மற்றும் அருங்காட்சியகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை, அங்கு அருங்காட்சியகம் ஒன்று இல்லாத குறையினை அது நிவர்த்தி செய்துள்ளது. மட்டக்களப்புத் தேசத்து தமிழரின் வரலாறும் பண்பாடும் மிகவும் புராதனமானவை. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலான இடையறாத தொடர்ச்சியினைக் கொண்டவை என்பது இந்நூற்றாண்டில் நடைபெற்ற களஆய்வுகள் மூலம் நிரூபணமாகிவிட்டது. தமிழ் மொழிப் பெயர் பொறித்த பண்பாட்டுச் சின்னங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. அவை பல நூற்றுக்கணக்கானவை. மலைகள், காடுகள், வயல் நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள் ஆகிய எல்லாவற்றிலும் அவை கிடைக்கின்றன. அவற்றிலே காணப்படும் சொற்கள் தமிழ்ப்பிராமி என்ற ஆதியான தமிழ் வரிவடிவங்களில் அமைந்துள்ளன.

களஆய்வுகள், தேடல்கள் என்பனவற்றின் இரண்டாவது கட்டம் வரலாற்றுக்காலம் முழுவதற்குமுரிய (கி.மு. 300 – கி.பி 2000) பண்பாட்டுச் சின்னங்கள் பற்றியது. அதில் இதுவரை ஏற்பட்டுள்ள சாதனைகளை முன்னிலைப்படுத்துவதே இவ்வருடம் ஆவணி மாதம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட இந்துசமயப் பண்பாட்டு அருங்காட்சியகம். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் பணிப்புரையின் பெயரில் இது அமைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கனகசிங்கம் சமுதாய அக்கறை கொண்டவர் என்பதற்கு இப்பணி ஓர் எடுத்துக்காட்டு.

இந்துநாகரிகத்துறைத் தலைவரான கலாநிதி வன்னமணி குணபாலசிங்கம் இந்தப் பணியில் அரும்பாடுபட்டு உழைத்தார். இப்பணியில் அவருக்குப் பக்க பலமாக இருந்தவர் இளம் விரிவுரையாளரான கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன் ஆவார். இவர்களது பணிகளின் பயனாக இது உருவாகியுள்ளது. அதிலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அரும்பொருட்கள் யாவும் நான்கு மாதங்களில் அவசரமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவை. அதனைக் கண்டவர்கள் தங்கள் முன்னோரின் வாழ்வியல் பற்றிய அதிசயமான அறிவுணர்ச்சியைப் பெற்றனர். கிடைத்த பொருட்கள் யாவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பாதுகாப்பிற்கும் பல்கலைக்கழகம் பொறுப்பாகவுள்ளது. ஒரு அருங்காட்சியகத்தின் பயன்பாடும், சிறப்பும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களிலே தங்கியுள்ளது. இந்த நிலையத்திலுள்ள பொருட்கள் யாவும் கோயில்கள், வீடுகள், என்பனவற்றிலிருந்து கிடைத்தவை. அவை பெரும்பாலும் கோயில்களுக்குரியவை. சில உருப்படிகள் வீட்டுப் பாவனைக்கும் உரியவை. மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை உலோகப் பொருட்கள், கற் சிற்பங்கள், மரவேலைப்பாடானவை, சுடுமண் சிற்பங்கள், என நான்கு வகையினவாகவும் வகைப்படுத்தலாம்.

இந்த நான்கு வகையான தேவர் படிமங்களையும் இங்கு மட்டுமே காணலாம். என்பது இவ் அருங்காட்சியக்திற்குரிய ஓர் சிறப்பாகும்.

இந்த அருங்காட்சியகத்துப் பொருட்களை அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றோம். கடவுட் படிமங்கள், வழிபாட்டிற்குரிய சமயச் சின்னங்கள், ஆராதனை வேளைகளில் உபசாரமாகப் பயன்படும் பொருட்கள், தீபங்கள், விளக்குகள். நீரேந்து கலசங்கள். சமையற் பாத்திரங்கள், உலோக வார்ப்பிலே பயன்படும் கருவிகள். எனப் பலவாறாக அவற்றை வகைப்படுத்தலாம். இவ்வாறான அரும்பொருட்களைக் கோயிலாரும், பிறரும் வழங்கியுள்ளனர். அவை பாவனையில் இல்லாது ஒதுக்கப்பட்டவை. ஆனால் அவற்றைப் போன்ற உருப்படிகள் இன்றுவரை வீடுகளிலும், ஆலயங்களிலும் பாவனையிலுள்ளன.

சைவசமய வழிபாட்டில் ஆராதனை வேளைகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் இங்குதான் மிகக் கூடிய வகையிற் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவையும் பல்வேறு நூற்றாண்டுகளில் உற்பத்தியானவை.

**கடவுட் படிமங்கள்**



வெண்கலம், கல், சுடுமண், மரம், ஆகிய நால்வகை மூலப்பொருட்களிலும் உருவான படிமங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. உலோகப் படிமங்கள் பெறுமதி மிக்கவை என்பதனால் அவற்றை எவரும் இலகுவிற் கைவிடமாட்டார்கள். வெண்கலத்தினாலான நான்கு கடவுட் படிமங்களை இங்கு சிறப்பானவைகளாகக் குறிப்பிடலாம். அவற்றுலொன்று நடராஜர் படிமம் அதனைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வ.கனகசிங்கம் வழங்கியுள்ளார். அது மிகவும் அண்மைக்காலத்திற்குரியது. மற்றயவை பழமையானவை. வேறெங்கும் கிடைக்காதவை, நூதனக் கோலமான உருப்படிகள் ஒன்றிலே கழுத்துடன் கூடிய தலையின் வடிவம் மட்டுமே வார்ப்பின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கண்கள் மூடிய கோலமானவை. நெற்றியிலே திலகம் அமைந்துள்ளது. கழுத்திற் பதக்க மாலையும் நீண்ட காதுகளிலே தோடுகளும் தெரிகின்றன. படிமம் தேவதை ஒன்றின் வடிவம் போன்றது. கழுத்தில் எழுத்துக்கள் பதிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் புராதனமானது.

இரண்டாவது உலோகப்படிமம் கோரமான முகபாவமுடைய கொற்றவையின் கோலமானது உடைப்பினால் அழிந்து தலைப்பாகம் மட்டும் எஞ்சியுள்ளது. வடிவமைப்புத் தனிரகமானது. முடிமேல் விசாலமான நாகபடம் தெரிகின்றது. மூன்றாவது உலோகப் படிமம் பிள்ளையாரின் உருவம் அதன் காலம் கி.பி.1800–1900 என்பதற்கு இடைப்பட்டது. இது களுதாவளைப் பிள்ளையார் கோயிலவர் வழங்கியது.

**கற் சிற்பங்கள்**

கணபதி, முருகன், அனந்தசயனக் கோலமான திருமால் நாயன்மார்கள், நவக்கிரக தேவர்கள், முதலானோரின் செதுக்குப் படிமங்கள் பல உள்ளன. முனைத்தீவிலிருந்து கிடைத்த பிள்ளையார் சிற்பம் கி.பி.பதினான்காம் நூற்றாண்டிற்குரியது. அறுமுகப்போடி என்ற பெயர் அதிலே தெரிகின்றது. முருகனது சிற்பங்களில் ஒன்று தேற்றாத்தீவிலிருந்து கிடைத்தது. தம்மாப்போடி என்ற பெயர் அதிலே காணப்படுகின்றது. அது மத்திய காலத்திற்குரியது. அதன் வேலைப்பாடு மிகவும் செம்மையானது.

இங்குள்ள இரண்டாவது முருகன் படிமம் திருக்கேதீஸ்வரம் கோயிலார் வழங்கியது. மிகவும் பழமையான 11,12ஆம் நூற்றாண்டுகளுக்குரியது. அது சோழரினாலே புனரமைக்கப்பட்ட கோயிலுக்குரியதென்று கருதலாம். அதில் எழுத்துக்கள் தெரிகின்றன. தனியார் ஒருவர் வழங்கிய அனந்தசயன வடிவம் அழகானது அதிலே விஜயநகர நாயக்கர் காலச் செல்வாக்குப் படிந்துள்ளது. அதன் காலம் 17ஆம் நூற்றாண்டெனக் கருதலாம். இங்குள்ள நாயன்மார்



சிற்பங்களில் இரண்டு முன்பு திருக்கேதீஸ்வரத்தில் இருந்தவை. அவை அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோரின்சிற்பங்கள்.அவற்றின்மூலம்அக்கோயிலின் மறைந்துபோன வரலாற்றின் அம்சமொன்று வெளிவருகின்றது. அவை 12ஆம் நூற்றாண்டிற்குரியன போலத் தெரிகின்றன. பொலன்னறுவையிலே நாயன்மாரின் சமகாலத்து வெண்கலப் படிமங்கள் கிடைத்துள்ளன. சண்டேஸ்வர நாயனாரின் சிற்பம் இரண்டும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை ஆசனக்கோலமானவையாகவும், மிகுதியான ஆபரணங்களோடும் வடிவமைக்கப்பட்டுள்ன. அதன் வேலைப்பாடுகள் 15ஆம் நூற்றாண்டிற்குரியவை. அவற்றுட் சில சைவசமயத்தில் ஒரு பிரதானமான அம்சமாகிவிட்டது. நாயன்மார் மீது மட்டக்களப்பு தேசத்தவர்கள் கொண்டிருந்த அபிமானத்துக்கு இவ்வுருவங்கள் அடையாளங்களாகும். .

**அழகிய மரச் சிற்பம்**

புலிவாகனத்தில் அமர்ந்த பத்திரகாளியின் அழகிய செதுக்கு வேலைப்பாடான சிற்பமொன்று கல்லாறு வடபத்திரகாளியம்மன் ஆலய பரிபாலன சபையினிடமிருந்து கிடைத்துள்ளது. விஜயநகர பண்பாட்டுச் செல்வாக்கின் விளைவாகவே இலங்கையில் வீரபத்திரர், பத்திரகாளி வழிபாடுகள் பரவின. இதனை மிகவும் நுட்பமான முறையில் கவர்ச்சியுடைய வடிவமாகச் செதுக்கியுள்ளனர். படிமம் எண்கரங்களைக் கொண்டது. திரிசூலம், வாள், வில், கோளம் முதலான படைக்கலங்களை ஏந்திய கோலமானவை. இதன் காலம் 16ஆம் நூற்றாண்டெனக் கருதலாம். மரத்திலே செதுக்கிய இதனைப் போன்ற சிற்பம் வேறெங்கும் காணப்படவில்லை

**சுடுமண் படிமங்கள்**

இந்த அருங்காட்சியத்தில் ஆறு சுடுமண் படிமங்கள்



உள்ளன. அவை பழைமையான தொல்பொருட்கள். ஒன்று திருமாலின் அனந்தசயனக் கோலம். ஏனையவை நாயன்மார்களின் படிமங்கள். அனந்தசயன வடிவம் அசாதாரணமானது. இதிலே திருமாலின் கோலம் பாம்பணைப்பள்ளியிற் கால்களை நீட்டிச் சாய்ந்திருப்பது போன்ற கோலம் தெரிகிறது. தலைமேல் விசாலமான ஐந்தலை நாகபடம் தெரிகின்றது. இதன்காலம் கி.பி 1600 – 1800 என்பதற்குள் அடங்கியதாக இருக்கலாம். சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயகுரவரின் படிமங்கள் செப்பமாக அமைந்தவை. அவற்றை உருவாக்கியவர்கள் அறிவுணர்ச்சிக்கு ஏற்ப வடிவமைத்துள்ளனர். உருப்படிகளிற் பெயர்களை அமைத்துள்ளனர். காலம் 19ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.

நாயன்மார் வழிபாடு சோழப்பேரரசின் காலத்திலே சைவ சமயத்தில் ஒரு பிரதானமான அம்சமாகி விட்டது. நாயன்மார் மீது மட்டக்களப்பு தேசத்தவர்கள் கொண்டிருந்த அபிமானத்துக்கு இவ்வுருவங்கள் அடையாளங்களாகும்.

**வழிபாட்டுச் சின்னங்கள்**

திரிசூலம், வேல், மயூரம், யானை, மூக்ஷிகம், நாகம்



முதலானவை தமிழ் பேசும் நாகரின் வழிபாட்டுச் சின்னங்கள்என்பதுஆய்வுகளின்மூலம்தெளிவாகின்றது. அவை இலங்கையில் 2000 வருடங்களுக்கு முன்பே வழிபாட்டுச் சின்னங்களாகி விட்டன. இவை மட்டக்களப்புத் தமிழரின் வழிபாட்டு முறையில் வழமையாகிவிட்டன என்பதும் அவை தொடர்ச்சியாக நிலைபெற்று வருகின்றன என்பதும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள உருப்படிகளில் உறுதியாகின்றது. இவ்வகையான சின்னங்கள் வேறெங்கும் வைக்கப்படவில்லை. நாட்டிலுள்ளவர்களும், சுற்றுலா வரும் வெளிநாட்டவர்களும், ஆய்வாளரும் இவற்றை ஆவலோடு வந்து பார்க்கும் நிலை விரைவில் உருவாகும்.

நாகர் நாகத்தை நாக வழிபாட்டின் சின்னமாகவும், தங்கள் இனக்குழுமத்தின் சின்னமாகவும் பயன்படுத்தினார்கள். எனவே அவர்களின் உற்பத்திப் பொருள்களிலும், கட்டுமானங்களிலும், நினைவுச் சின்னங்களிலும், வழிபாட்டுச் சின்னங்களிலும் நாக வடிவத்தை அமைத்துக் கொள்வது வழமை.

நாக வழிபாடு சைவ சமயத்திலும், பௌத்த பண்பாட்டு மரபிலும் கலந்து விட்டது. இந்தக் கலப்பும் கூடுதலாக மட்டக்களப்பு தேசத்தில் ஏற்பட்டுள்ளது. இங்கு வைக்கப்பட்டுள்ள நாக வடிவங்களிற் சில நாகதம்பிரான் கோயில்களில் இருந்தவை. அவை அனைத்தும் வெண்கலப் படிமங்கள்.

தொல்பொருள் திணைக்களத்தின் பொறுப்பாக இருக்கும் யாழப்பாணம் அருங்காட்சியகம் என்பனவற்றில் இவற்றைக் காணமுடியாது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஐந்தலை நாக வடிவங்கள் பெருந்தொகையானவை வன்னி மாவட்டங்களில் உள்ளன. அவை கவனிப்பாரற்று மறைந்து போகும் நிலையை அடைந்துவிட்டன. அவற்றுள் பெரும்பாலானவை தமிழிற் பெயர் எழுதப்பட்டுள்ளது. வெவ்வேறு காலங்களுக்குரிய சிலம்புகள் இங்கே காணப்டுகின்றன. அவை உலோக வார்ப்பானவை. அணிகலன்களாகவன்றி வழிபாட்டுச் சின்னங்களாக பயன்பட்டன. சிலம்ப பத்தினி வழிபாட்டிற்குரிய சின்னம். இவற்றுட் பெரும்பாலானவை கண்ணகி கோயில்களிற் கிடைத்தவை. மட்டக்களப்பு தமிழர் மத்தியில் கண்ணகி வழிபாடு பெருஞ் செல்வாக்கு பெற்றுள்ளது. விழாக் காலங்களிற் கண்ணகி வழக்குரை காவியம் படிக்கப்படும். கொம்பு முறித்தல் விளையாட்டு விழாக் காலங்களில் நடைபெறுவது. அதில் இடம்பெற்ற

ஒருசோடி கொம்புகளை இங்கு வைத்துள்ளனர்.

**ஆராதனைகளிற் பயன்படும் உபசாரப் பொருட்கள்**



ஆலயங்களில் ஆராதனை வேளைகளில் உபசாரஞ் செய்யுமிடத்து கொடி, குடை, தர்ப்பம், சாமரம், விசிறி, ஆலவட்டம் முதலானவற்றைப் பயன்படுத்துவார்கள். மூலஸ்தானத்தில் ஆராதனை நிகழ்வதால் வெளியில்

வீடுகளிலே ஒவ்வொரு நாளும் அதை முற்காலங்களில் எரித்தனர். வெவ்வேறு விதமான விளக்குகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. அவை 10 – 18ஆம் நூற்றாண்டுக்குரியவை.

தூக்கு விளக்குகள் வெண்கல வார்ப்பான தனிரகமானவை. தலைப்பாகத்திலே கொழுக்கியுடைய சங்கிலி ஒவ்வொன்றிலும் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றிலே பல அலகுகள் உள்ளன. இந்த விளக்குகள் கனதியானவை. நீண்ட காலற்ற குத்து விளக்குகளுள் பெருந்தொகையான விளக்குகளை காட்சிக்கு வைத்திருக்கின்றார்கள். வேறு பிராந்தியங்களில் இவ்வாறான தூக்கு விளக்குகள் காணப்படவில்லை.



உண்ணும் பழக்கம் இல்லாதவர்கள் சிலர் இன்றும் அவற்றையே பயன்படுத்துகின்றார்கள். ஆதியில் நாகரே இவற்றை உருவாக்கினார்கள்.

பொம்பரிப்பில் அகழ்வாய்வு செய்த பொழுது பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களோடு ஒரு வட்டாவும் காணப்பெற்றதென்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் அதிசயக் கோலமான உலோக வேலைப்பாடான மலர்த் தட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளது. அது ஓலையில் இழைத்த உருப்படி போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பாவனைக்கும், கோயில்களிலும் பயன்பட்ட உலோகப் பொருட்கள் போதிய அளவில் இங்கு

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒரு அதிசயமான அருங்காட்சியகம்

நின்று வணங்குவோருக்கு அவை தெளிவாகத் தெரிவதில்லை. அவ்விதமான உலோக வார்ப்பான பொருள்கள் எல்லாம் இங்கு வைக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பாகும். இவற்றை இலங்கையில் வேறொரு அருங்காட்சியகத்தில் கண்டு கொள்ள இயலாது.

ஆராதனைகளிற் பயன்படுத்தப்பட்ட பொருள்களுள் இன்னொரு வகையானவை தீபங்கள். தீபாராதனை என்பது சைவசமய வழிபாட்டில் பிரதானமான அம்சமாகும். ஆராதனைக்குப் பயன்படும் எல்லா வகையான தீபங்களையும் இங்கே காணமுடிகின்றது. ஏகதீபம், பஞ்சதீபம், அடுக்கு தீபம், பஞ்சாரத்தி தீபம் முதலானவை பொதுவழக்கிலுள்ளவை. மயூர தீபம், நாகதீபம், மூக்ஷிக தீபம் முதலானவை மட்டக்களப்புத் தேசத்திற்குச் சிறப்பானவை.

**விளக்கு வகைகள்**



பலவகையான உலோக வார்ப்பான விளக்குகள் இங்கு போலப் பெருந்தொகையில் வேறெங்கும் இதுவரை காணமுடியவில்லை. அவை கைவிளக்கு, குத்து விளக்கு, தூக்கு விளக்கு என மூவகைப்படும். அவை புராதனமானவை, வெவ்வேறு காலப் பகுதிக்குரியவை. விளக்கெரிப்பதற்கு முற்காலங்களில் வேப்பெண்ணை, இலுப்பெண்ணை ஆகியவற்றையும் பயன்படுத்தினார்கள். பொலன்னறுவையிலுள்ள சில கல்வெட்டுக்கள் விளக்கெரிப்பதற்கு ஆட்டுப்பால், பசுப்பால் என்பவற்றின் மூலம் உற்பத்தியாகின்ற நெய் வழங்கியமை பற்றிக் குறிப்பிடுகின்றன. அண்மைக் காலத்திலே தேங்காய் எண்ணெய்யினைப் பயன்படுத்துவது வழமையாகி விட்டது.

வரலாற்றுக் காலமும் முழுவதும் பாவனையிலிருந்த கைவிளக்குகள் எல்லாம் நாகரின் வடிவமைப்புக்களை மூலமாகக் கொண்டவை. அவற்றிலொன்றை வந்தாறுமூலையில் முதன்முதலாகக் கண்டோம். அதில் மணிணாகன் பள்ளி என்ற பெயர் தெளிவாகத் தெரிந்தது. அதன் பின்பு அவற்றைப் போன்ற உருப்படிகளை யாழ்ப்பாணத்திலும் காணமுடிந்தது.

இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் உருப்படிகளில் இரண்டு நாகரின் காலத்திற்குரியவை. மற்றவை யாவும் 6ஆம் நூற்றாண்டு முதலாக 16ஆம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியவை.

கைவிளக்குகளைப் போல குத்துவிளக்குகளும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களிலும் புழக்கத்தில் இருந்தன. அவை பெரும்பாலும் 5 அலகுகள் கொண்டவை. இங்கு 67 அலகுகளுடைய விளக்குகளும் உள்ளன. மங்கல வேளைகளிலும், தைப்பொங்கல், வருக்ஷப் பிறப்பு, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு முதலிய சிறப்பு நாட்களில் அவற்றை எரிப்பது வழக்கம். சில

**உலோகப் பாத்திரங்கள்**



பல்வேறு விதமான உலோகப் பாத்திரங்கள் தமிழர் சமுதாயத்திலே புழக்கத்தில் இருந்தன. கிண்ணம், கெண்டி, செம்பு, பானை, சட்டி, குடம், கிடாரம், வட்டா, சேர்வக்கால், குவளை ஆகிய யாவற்றையும் புதிய அருங்காட்சியத்திலே வைத்துள்ளனர். தட்டம், தாம்பாளம் என்பனவும் கணிசமான தொகையில் உள்ளன.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து 2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நூற்றாண்டுகளில் அவை உற்பத்தியானவை. இவற்றைப் போன்ற உருப்படிகளைத் தமிழர் வாழும் வேறு பிராந்தியங்களிலும் வழங்கினார்கள். ஆயினும் அங்குள்ளவற்றை இதுவரை எவரும் பெருந்தொகையிலே காட்சிப்படுத்தவில்லை.

செம்பு, குடம் என்பன நீர் கொள்ளும் கலசங்கள் தண்ணீர் குடிப்பதற்கும், ஆடு, மாடுகள் பால் கறப்பதற்கும் செம்புகள் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுதும் அவை புழக்கத்தில் உள்ள கொண்டாட்டங்களிலே விருந்தினரைக் கௌரவிப்பதற்கும் செம்புத் தண்ணீர் கொடுக்கும் வழக்கமுண்டு. கெண்டி பெரும்பாலும் கோயில்களிலும், வீடுகளிலும் சமயச் சடங்குகளிற் பயன்படுத்தப்படுவது. நீரைத் தெளிப்பதற்கும், ஊற்றுவதற்கும் அது பயன்படும்

செப்புக்குடங்கள்,நீரேந்துகலன்கள்,குழாய்நீர்வழங்கும் வசதிகள் ஏற்படும் வரை வயல்வெளிகளிலிருக்கும் நல்ல தண்ணீர் கிணறுகளிலிருந்து பெண்கள் நிரை நிரையாகச் செம்புக் குடங்களில் நீரை அள்ளிச் செல்லும் காட்சி யாழ்ப்பாணத்திற் பொதுவானது. மட்டக்களப்பிலும் செப்புக் குடங்களை நீரேந்து கலன்களாகப் பயன்படுத்தியுள்ளனர்.

அங்கும் வேறு பிராந்தியங்களிற் சருவப்பானைகளைப் பயன்படுத்தியுள்ளனர். சிறப்பு நாட்களில் வீட்டு முற்றத்திலும், கோயில்களிலும் பொங்கல் செய்வதற்குப் அவை பயன்பட்டன.

இவற்றோடு வீடுகளிற் புழங்கிய சருவச் சட்டி, கொத்துச் சட்டி போன்றனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு காலகட்டங்களில் உற்பத்தியான அகன்ற வாயுடைய பானைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. அவை மங்கல வேளைகளிலே பெருமளவில் விருந்தினருக்கு வழங்குவதற்கான உணவுகளைச் சமைப்பதற்குப் பயன்பட்டவை. கோயில்களில் நெய்வேத்தியம் வைப்பதற்கான அமுது சமைப்பதற்கும் இவற்றைப் பயன்படுத்தினார்கள்.

**தட்டங்களும் தாம்பாளங்களும்**

பெரிய தட்டங்கள் தாம்பாளம் எனப்படும். அவற்றின் பயன்பாடும் பல வகைப்படும். சிறிய தட்டங்களில் வெற்றிலை, பாக்கு என்பவற்றை வீடுகளுக்கு வருவோருக்கு வழங்குவது வழமை. அது






**மட்டக்களப்பு வழமைக்குச் சிறப்பானவை. சைவசமய வழிபாட்டு முறை, உலோகப் புழக்கம் ஆகியன பற்றிய ஆய்வுகளுக்கு இங்குள்ள பொருள்கள் பற்றிய அறிவுணர்ச்சி இன்றியமையாத தேவையாகும். உலோகப் பொருள்களின் உற்பத்தி முறை மட்டக்களப்பில் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலைக்கு இருந்தமைக்கு அவை அடையாளங்களாகும். வார்ப்புக் கலையிற் பயன்படுத்திய சில கருவிகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் தொடர்பான எல்லாத் தொல்பொருள்களையும் அடக்கிய பெரு நிறுவனமாக இந்த அருங்காட்சியகம் மலர வேண்டும்.**



**பேராசிரியர் சி.பத்மநாதன்**
**வேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

காணப்படுகின்றன. பெரும்பாலானவை இலங்கைத் தமிழர் சமூகங்கள் அனைத்துக்கும் பொதுவானவை. சில மட்டக்களப்பு வழமைக்குச் சிறப்பானவை. சைவசமய வழிபாட்டு முறை, உலோகப் புழக்கம் ஆகியன பற்றிய ஆய்வுகளுக்கு இங்குள்ள பொருள்கள் பற்றிய அறிவுணர்ச்சி இன்றியமையாத தேவையாகும். உலோகப் பொருள்களின் உற்பத்தி முறை மட்டக்களப்பில் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலைக்கு இருந்தமைக்கு அவை அடையாளங்களாகும். வார்ப்புக் கலையிற் பயன்படுத்திய சில கருவிகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் தொடர்பான எல்லாத் தொல்பொருள்களையும் அடக்கிய பெரு நிறுவனமாக இந்த அருங்காட்சியகம் மலர வேண்டும்.



# நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அறிவியல் பங்களிப்பை வழங்குவது முஸ்லிம் புத்திஜீவிகளின் பொறுப்பாகும்

## பீடாதிபதி பேராசிரியர். மஸாஹிர்

**நூருல் /ஹுதா உமர்**

தற்காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலகு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருகின்றது. கோவிட்-19 பெருந்தொற்றில் இருந்து உலகம் சிறிது சிறிதாக மீட்சியடைந்து கொண்டுவரும் இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடியானது மேலும் பல நெருக்கடி மிக்க நிலமைகளை உருவாக்குவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. பெருந் தொற்றினால் ஏற்கனவே பலவீனமடைந்துள்ள உலகப் பொருளாதாரமானதுபலஅதிர்ச்சியானதாக்குதல்களால் மேலும் பலவீனப்பட்டு வருகின்றது. எதிர்பார்த்ததை விட உலகளவில் உருவாகியுள்ள உயர் பணவீக்கம், உக்ரைன் போர், உணவு மற்றும் பண்டங்களின் விலையேற்றம், நிலவியல்சார்ந்த அரசியல், நிச்சமற்ற பொருளாதார நிலமைகள், வறுமை மற்றும் பட்டினி ஆபத்து போன்றன இதற்கான அடிப்படைக் காரணிகளாக அடையாளப்படுத்தலாம். இந்தக் காரணிகள் உலகப் பொருளாதாரத்தை வெறும் 3.1 வீத வளர்ச்சியை மாத்திரம் 2022 மற்றும் 2023 காலப்பகுதியில் எட்டலாம் என மீள்கணிப்புக்குள்ளாக்கியுள்ளன. இது 2022 ஜனவரியில் எதிர்வுகூறப்பட்டதிலிருந்து முறையே 0.9 மற்றும் 0.4 வீதம் குறைவானதாகும் என இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் கடந்த 28.09.2022 அன்று நடாத்திய 9ஆவது சர்வதேச ஆய்வு மாநாட்டில் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இதேவேளை எமது தாய்நாடான இலங்கைத் திருநாடு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. 1948இல் இலங்கை சுதந்திரமடைந்த போது ஆசியாவில் பலம்வாய்ந்த பொருளாதார மையங்களுள் ஒன்றாக அது இருந்தது. ஆனால் அதன் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சிப் பாதையையே கடந்து வந்துள்ளது. இலங்கையில்காணப்படுகின்றதற்போதைய இக்கட்டான பொருளாதார நிலைமை, பல வருடங்களாக தொடர்ந்து வந்துள்ள திறமையற்ற முகாமைத்துவம், ஊழல், தூரநோக்கற்ற கொள்கையாக்கம், நல்லாட்சிக்கான மூலக்கூறுகளை இழந்தமை போன்றனவற்றின் விளைவாகும். இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டு நாணய ஒதுக்கத்தின் பற்றாக்குறை மற்றும் சர்வதேச மூலதனச் சந்தையில் நுழைய முடியாது போனமை



என்பன வரலாற்றில் என்றுமே காணாத கடன்சுமைக்கு வழிவகுத்துள்ளது. சரியாக முகாமைப்படுத்தப்படாத கடன்கள், வரிவிலக்கு என்பன வரவுசெலவுத்திட்டத்தில் இருக்கின்ற துண்டுவிழும் தொகையை மேலும் விரிவுபடுத்தியுள்ளன. இரசாயன உர இறக்குமதித் தடை மற்றும் திடீரென இலங்கை ரூபாவை மிதக்கவிட்டமை போன்றன இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாயின. இந்நாட்டின் பிரதான வருமான மூலங்களான உல்லாசப் பயணத்துறையும் ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதியும் அண்மைக்காலமாக 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள், அவற்றைத் தொடர்ந்து 2020இல் ஏற்பட்ட கோவிட்-19 போன்ற உள்ளக மற்றும் வெளியகக் காரணங்களினால் பாதிப்படைந்துள்ளன. தற்போது இந்தப் பொருளாதார நெருக்கடி ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி போன்றவற்றில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அடிப்படையில் குறிப்பாக முஸ்லிம் கல்விமான்கள் பொதுவாக முஸ்லிம் சமூகம் இந்த இக்கட்டான நிலையின் போது அவர்களின் பொறுப்பு அல்லது பங்களிப்பு என்ன? இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேன்படுத்துவதற்கான அறிவியல் பங்களிப்பை வழங்குவது முஸ்லிம் புத்திஜீவிகளின் அடிப்படைப் பொறுப்பாகும். இதனடிப்படையில் முஸ்லிம் அறிஞர்களும் ஆய்வாளர்களும் இயற்கை வளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான மாற்று வழிகளை முன்வைக்கலாம். அவர்கள் பொருளாதாரம் ஒரு சிலரிடம் மாத்திரம் சுழன்று கொண்டிருக்காமல் நீதியான முறையில் மக்கள் மத்தியில் அதனைச் சுழற்சிக்குட்படுத்துவதற்கான வழிமுறைகளை கருத்துரைக்கலாம். வட்டியற்ற வங்கி முறை பற்றிய ஆழமான மற்றும் விரிவான விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். சமூகத்தில் வலுவிழந்துள்ளவர்களை வலுவூட்டி, அவர்களை பொருளாதார ரீதியாக மேன்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான வழிமுறையாக 'ஸகாத்தை' அறிமுகப்படுத்தலாம். சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையில் வளஉற்பத்தியை மேற்கொண்டு, அதனை எவ்வாறு உச்ச பயனுள்ளதாக அமைக்க முடியும் என விதைந்துரைக்கலாம். மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் அறபிகள் மற்றும் முஸ்லிம் உல்லாசப்பயணிகளை கவர்வதற்கான வழிமுறைகளைக் காட்டிக் கொடுக்கலாம். இஸ்லாத்தின் பொருளாதார ஆக்க சாதனங்களான ஸகாத், ஸதகா, வக்ஃப், வஸிய்யா, ஹிபா மற்றும் வராஸா என்பவற்றை உச்சபயன்பாடு தரத்தக்க வகையில் பயன்படுத்துவதற்கான முன்மொழிவுகளை முன்வைக்க முடியும்.- என்றார்

# மன்னாருக்கும் சமூகப் பாதுகாப்பு சபையின் தேசிய விருது



**( வாஸ் கூஞ்ஞ)**

சமூக பாதுகாப்பு சபை வட மாகாணத்துக்கான விருது வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (29.09.2022) யாழ்ப்பாண மாவட்டத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாவட்ட செயலாளர்கள்இபிரதேசசெயலாளர்கள்இஉதவிபிரதேச செயலாளர்கள்இ பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து மாவட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் இளைஞர் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய முன்னேற்பாடு திட்டமான ஆரஸ்சாவஇ சுரக்கும திட்டத்தின் ஆரஸ்சாவ திட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான ஓய்வூதியத் தொகையின் பெறுமதியின் அடிப்படையில் புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட இலக்கினை 100 வீதம் பூர்த்தி செய்தமைக்காக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.அ.ஸ்டான்லி டீமெல் அவர்களுக்கு தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதே போன்று பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட இலக்குகளை தேசிய ரீதியில் அடைவு மட்டத்தை அடைந்து கொண்ட பிரதேச செயலகமாக நானாட்டான் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டதுடன் அப்பிரதேச செயலகத்துக்கான தேசிய விருதும்(2021) வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதேபோன்று 2019ஆம் ஆண்டு தேசிய ரீதியில் அடைவு மட்டத்தை அடைந்த பிரதேச செயலகமாக மன்னார் நகர பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டதுடன் அதற்கான தேசிய விருதும் முன்னாள் பிரதேச செயலாளருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# வாழைச்சேனை அந் நூரில் இருந்து மருத்துவ பீடத்திற்கு முதல் தடவையாக தெரிவான மாணவனுக்கு கௌரவிப்பு

**எஸ்.எம்.எம். முர்ஷித்**



வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலையில் இருந்து முதலாவது தடவையாக மருத்துவ பீடத்திற்கு தெரிவான மாணவனை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (30.09.2022) ஜும்ஆ தொழுகையின் பின்னர் வாழைச்சேனை ஹைராத் ஜும்ஆ பள்ளிவாயலில் இடம் பெற்றது. வாழைச்சேனை ஹைராத் ஜும்ஆ பள்ளிவாயலின் தலைவர் எஸ்.எம்.அமானுல்லாஹ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பள்ளிவாயல் நிருவாகிகள் அந் நூர் தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களான ஏ.எல்.இப்றாஹிம் மற்றும் எஸ்.எச்.பறூஸ், கணித விஞ்ஞான பிரிவுக்க பொறுப்பான ஆசிரியர் எம்.எம்.நவாஸ் மற்றும் ஊர் பொது மக்களும் கலந்து கொண்டனர். இதன் போது வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலையில் இருந்து முதலாவது தடவையாக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி பாடாலைக்கும் தனது பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த அலாவுதீன் முஹம்மட் அப்ஸர் என்ற மாணவனை பள்ளிவாயல் நிருவாகத்தினர் நினைவு சின்னமும் பணப்பரிசும் வழங்கி கௌரவித்தனர்.

# சாய்ந்தமருது லீட் த வே முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு




**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது லீட் த வே முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வுகள் பணிப்பாளர் ஐ.எம். உவைஸ் தலைமையில் இன்று (30)இடம் பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சட்டத்தரணி எம்.பி.எம்.பௌஸான் கலந்து கொண்டார். பாடசாலையின் அதிபர் எம்.எப்.பர்ஸானா அவர்களின் நெறிப்படுத்தலில் மாணவர்களுக்கான கலை நிகழ்வுகள் மற்றும் சங்கீத கதிரை,பலூன் உடைத்தல்,முகத்தில் சித்திரம் தனி நிகழ்ச்சிகள் மற்றும் குழு நிகழ்ச்சிகள் என்பன் மிகவும் சிறந்த முறையில் இடம்பெற்றது. மேலும் இதன் போது சிறுவர் தின போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பிரதம அதிதியினால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.




கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நடமாடும் நூலகம் அங்குரார்ப்பணம்

வாசிப்பு மாதத்தினை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நேற்று (29) நடமாடும் நூலகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது.



"அறிவார்ந்த சமுகத்திற்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளில் இவ் வருடத்திற்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நாடெங்கிலும் முன்னெடுக்கப்படுவரும் நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையானது வாசிப்பு மாத நிகழ்வுகளின் ஓர் அம்சமாக நடமாடும் நூலகங்களை பாடசாலை ரீதியில் அங்குரார்ப்பணம் செய்யும் பணிகளை முன்னெடுத்து வருகிறது. இதன்படி மட்டக்களப்பு மாநகர சபையின் நூலகக் குழுவின் மேற்பார்வையில், மட்டக்களப்பு பொது நூ லகத்தின் ஒழுங்கமைப்பில் திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நடமாடும் நூலகம் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

அத்துடன், வாசிப்பின் முக்கியத்துவத்தினையும், அதன் ஊடாக மாணவர்கள் அடையும் அனுகூலங்களையும் பிரதிபலிக்கும் வகையில் வீதி நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டதுடன் மாணவர்களுக்கு இலவச நூலக அங்கத்துவ அட்டைகளும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

வாசகர் வட்டத்தின் தலைவர் எஸ்.அருளானந்தம் தலைமயில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், மட்டக்களப்பு மாநகர சபையின் நூலக மற்றும் பயன்பாட்டுக் குழுவின் தலைவரும், மாநகர சபையின் உறுப்பினருமான ச.கமலருபன் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர் ம.சண்முகலிங்கம் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேலும் திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் திருமதி. வேணிதரன், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி சுதாகரி மணிவண்ணன், மட்டக்களப்பு பொது நூலகத்தின் நூலகர் செல்வி. த.சிவராணி உள்ளிட்டவர்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்





**ஹஸ்பர்**

அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகள் மூலம் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது மாவட்ட மக்களுக்கும் குறித்த காணி கிடைக்கப்பெறலை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோராள தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று(29) மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், திருகோணமலை மாவட்டத்தில் பிற மாவட்டங்களை சேர்ந்தவர்கள் பல அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து காணிகளை பெற்றுக்கொள்கின்றார்கள். இருப்பினும் குறித்த காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் வெற்றுக்காணிகளாகவும் காடுகள் வளர்ந்தும் காணப்படுகின்றன. இவற்றை அனுமதிக்க முடியாது. அக்காணிகளுள் அதிகமானவை அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய குத்தகை கட்டணத்தை செலுத்தாமலும் உள்ளனர். தற்போது நாடு முகங்கொடுக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மாவட்டத்தில் பயிர் செய்ய முடியுமான காணிகளை இனங்கண்டு காணியற்ற மக்களுக்கு அவற்றை வழங்க வேண்டும். இதன் மூலம் உணவுற்பத்தியை மேம்படுத்தக்கூடியதாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

மூதூர் ஆதிவாசிகளின் காணிப்பிரச்சினைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது. மூதூர் ஆதிவாசிகளின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக குறித்த ஆதிவாசிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே இப்பிரச்சினை குறித்து ஆராய்தல் வேண்டும். இதற்காக விசாரணைக்குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உரிய விசாரணைகளை மேற்கொண்டு குறித்த செயற்பாட்டை விரைவாக மேற்கொள்ளுமாறு இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

உணவுபாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பில் ஜனாதிபதிதலைமையில்தேசியகுழுஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பொறிமுறையில் மொத்தமாக 07 குழுக்கள் உள்ளன. தற்போது மாவட்டத்தில் 230 கிராமியக்குழுக்களும் 14 பிரதேச குழுக்களும் மாவட்டக்குழுவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் எந்தவொரு குடிமகனும் பசியின்றி இருக்க முடியாது. எந்தவொரு பிள்ளையும் போசாக்கின்மையால் வாடக்கூடாது. அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். இந்நிலையை ஏற்படுத்துவது இக்குழுக்களின் நோக்கமாக அமையப்பெற்றுள்ளது. கிராமிய ரீதியாக குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளும் தரவுத்தள கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும் பயிர் செய்யக்கூடிய காணிகளை இனங்கண்டு அவற்றில் பயிர்செய்ய முற்படுவதன் மூலம் உணவுற்பத்தியை மேம்படுத்திக்கொள்ள முடியும் என இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வேதத்தீவு பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் படகுப்பாதை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 30 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் 972 வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 203.36 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 56 வேலைத்திட்டங்கள் இவ்வருடம் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 140.96 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போக பயிர்ச்செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 30 லீட்டர் டீசலை விவசாயிகளுக்கு வழங்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது. முத்து நகர் பிரதேசத்திற்கு நடமாடும் வைத்திய சேவையை வழங்குமாறு கோரப்பட்ட கோரிக்கைக்கமைய அப்பிரதேச மக்களுக்கு அடுத்த வாரம் முதல் குறித்த நடமாடும் வைத்திய சேவையை வழங்க நடவடிக்கை எடுப்பதாக இதன்போது திருகோணமலை பிராந்திய வைத்தியசேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். மாவட்டத்தில் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

விவசாயம், காணி, கால்நடை, வனஜீவராசிகள், மீன்பிடி, வனப்பாதுகாப்பு,போக்குவரத்து மற்றும் கல்வி உட்பட பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்,உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க, கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படை மற்றும் பொலிசார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான இருநாள் செயலமர்வு




**த.சுபேசன்**

வடமாகாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான இருநாள் செயலமர்வு கடந்த 27,28ஃ09 யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. புலம்பெயர்விற்கான சர்வதேச அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயலமர்வானது ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை தொடர்பான சம்பவங்களை பொறுப்புடன் செய்தி அறிக்கையிடல்,முறையற்றஃ பாதுகாப்பற்ற புலம்பெயர்வு காரணமாக பெண்கள்,சிறுவர்கள் உட்பட பலரும் இடைத்தங்கல் நாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தவிர்த்தல்,போலியான வெளிநாட்டு முகவர்களிடம் பொதுமக்கள் ஏமாறுவதனை தடுத்தல்,இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவினை மேற்கொண்டு புலம்பெயர வேண்டியதன் அவசியத்தினை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக குறித்த இருநாள் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. செயலமர்வின் இறுதியில் ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் செயலமர்வில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# இரண்டு மலசலகூட தொகுதிகள் திறந்து



**தலவாக்கலை பி.கேதீஸ்**

வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் கண்டி வத்தேகம பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இரண்டு மலசலகூட தொகுதிகள் திறந்து வைக்கப்பட்டன.பாடசாலை அதிபர் பி.செல்வராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வத்தேகம கல்வி வலய தமிழ் பிரிவிற்கான இணைப்பு அதிகாரி திருமதி திலககுமாரி, வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் தலைவர் என்.முரளிதரன், பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் பணிப்பாளர் பி.யோகேஸ்வரன் , ஆசிரியர்கள், மாணவர்கள் , பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

# குடும்பத்தினர் முன்னிலையில் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்



**(அ . அச்சுதன் )**

திருகோணமலை – தோப்பூர் பாத்திமா மகளீர் கல்லூரியின் விஞ்ஞானப் பாட ஆசிரியர் எம்.எல்.றமீஸ் அண்மையில் சட்டமானி பட்டம் பெற்றதையடுத்து பாடசாலை சமூகத்தால் கல்லூரியில் வைத்து இன்று வெள்ளிக்கிழமை (30) நினைவுச் சின்னமும், பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டார். திஃமூ பாத்திமா முஸ்லீம் மகளீர் கல்லூரி அதிபர் ஏ.பீ.ஏ.ஜப்பார் தலைமையில் இவ் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது தாய்தந்தையர், மனைவி , பிள்ளைகள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு சட்டமாணி பட்டம்பெற்ற எம்.எல்.றமீஸ் ஆசிரியர் குடும்பத்தினர் முன்னிலையி. கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.










இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழா காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் தினமும் கலைநிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. **(படங்கள் வி.ரி.சகாதேவராஜா)**